செ.வெ.எண்: 11 நாள்: 05.07.2016

# பத்திரிக்கை செய்தி

மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக சிறப்பாக சேவை புரிந்தவர்களுக்கான விருதுகள் 2016க்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

ஆண்டுதோறும் சுதந்திரதின விழாவில் மாற்றுத்திறனாளிகள் நலனுக்கான சிறப்பாக சேவை புரிந்தவர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் மாநில விருதுகள் வழங்கப்படுகிறது. 15.08.2016 அன்று நடைபெற உள்ள சுதந்திரதின விழாவில் கீழ்குறிப்பிட்டுள்ள விருதுகள் வழங்கப்பட உள்ளது.

வழங்கப்பட உள்ள விருதுகளின் விபரம்:- 1. மாற்றுத்திறனாளிகளுக்கு சேவை புரிந்த தொண்டு நிறுவனம், 2. மாற்றுத்திறனாளிகளுக்கு சேவைபுரிந்த சிறந்த மருத்துவர், 3.மாற்றுத்திறனாளிகளுக்கு அதிக அளவில் வேலைவாய்ப்பு அளித்த தனியார் நிறுவனம், 4.மாற்றுத்திறனாளிகளுக்கு சேவைபுரிந்த சிறப்பு சமூக நலப்பணியாளர்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக சிறப்பாக சேவை புரிந்தவர்கள் மேற்படி விருதுகளுக்கு 11.07.2016-க்குள் விண்ணப்பிக்கலாம் என்றும் அதற்கான விண்ணப்பங்களை மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர், புதிய பேருந்து நிலையம் அருகில், புதுக்கோட்டை அவர்களை அணுகி பெற்றுக்கொள்ளலாம் என்று புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**